சுருக்கம்

பேரிடர் மேலாண்மைச் சட்டம் 2005 – கோவிட்–19 – தலைவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு சமூக இடைவெளியை கடைபிடித்து மாலை அணிவித்தல் மற்றும் மலர்தூவுதல் தொடர்பாக – வழிகாட்டுதல்கள் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

வருவாய் (ம) பேரிடர் மேலாண்மை (பே.மே.2)த்துறை

அரசாணை (நிலை) எண்.399 நாள்: 31. 07.2020

சார்வரி–ஆடி 17,
திருவள்ளுவர் ஆண்டு, 2051
படிக்க:

1) அரசாணை (நிலை) எண்.172, வருவாய் மற்றும் பே.மே. (பே.மே.2)த்துறை, நாள் 25.3.2020 மற்றும் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட திருத்தங்கள்
2) அரசாணை (நிலை) எண்.217, வருவாய் மற்றும் பே.மே. (பே.மே.2)த்துறை, நாள் 3.5.2020 மற்றும் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட திருத்தங்கள்
3) அரசாணை (நிலை) எண்.345, வருவாய் மற்றும் பே.மே. (பே.மே.2)த்துறை, நாள் 12.7.2020 மற்றும் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட திருத்தங்கள்
4) அரசாணை (நிலை) எண்.324, வருவாய் மற்றும் பே.மே. (பே.மே.2)த்துறை, நாள் 30.6.2020 மற்றும் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட திருத்தங்கள்
5) அரசாணை (நிலை) எண்.396, வருவாய் மற்றும் பே.மே. (பே.மே.2)த்துறை, நாள் 31.7.2020
6) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நினைவகங்கள்)துறையின் கருத்துரு நாள் 31.7.2020

<u>ஆணை:</u>

பார்வையில் கண்ட அரசாணைகள் வாயிலாக கொரானா நோய் தொற்று பரவலை தடுப்பதற்காக தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் அடிப்படையில் மாநிலம் முழுவதும் 25.3.2020 முதல் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டு, பார்வை 5ல் கண்ட அரசாணை வாயிலாக 31.8.2020 வரை மாநிலம் முழுவதும் சில தளர்வுகளுடன் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆகஸ்ட் 2020 மாதத்தில் அனைத்து ஞாயிற்றுக் கிழமைகளில் எந்த தளர்வுகளும் இன்றி முழு ஊரடங்கு கடைபிடிக்கப்பட வேண்டும் என்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்திய திருநாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்ட தன்னிகரில்லாத் தலைவர்களையும், தமிழ்மொழி வளர்ச்சிக்காக அல்லும் பகலும் உழைத்த அறிஞர் பெருமக்களை புகழ்ந்திடவும் அரசால் அவர்களது பிறந்தநாள் மற்றும் நினைவு நாள் நிகழ்ச்சிகள் அரசால் நடத்தப்பட்டு வருகிறது.

3. தற்போது, கோவிட் 19 நோய் தொற்று உள்ள நிலையில், மேலும் பரவாமல் இருக்க அரசு பல்வேறு கட்டுப்பாடுகளையும், தளர்வுகளையும் விதித்துள்ளது. இந்நிலையில் மேற்கண்ட தலைவர்களின் சிலைகளுக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சிக்கு, ஊரடங்கு அமலில் உள்ள

நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் மட்டும் உரிய சமூக இடைவெளியைக் கடைபிடித்து மாலை அணிவிக்க அவ்வப்போது அனுமதி அளிக்கப்படுகிறது.

4. மேற்காணும் சூழ்நிலையில் முழு ஊரடங்கு அமலில் உள்ள நாட்களிலும் தலைவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்வது தொடர்பாக கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

i) அரசு அறிவித்த வழிமுறைகளைப் பின்பற்றி உரிய சமூக இடைவெளியை கடைபிடித்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் மாவட்ட ஆட்சித் தலைவருடன் சென்று மாலை அணிவித்து மரியாதை செய்ய அனுமதிக்கப்படுகிறது .

ii) மரியாதை செய்யப்படும் தலைவர்களின் குடும்பத்தை சார்ந்தவர்களும் (5 நபர்களுக்கு மிகாமல்) அந்தந்த மாவட்டத்தைச் சார்ந்த பதிவு பெற்ற அரசியல் கட்சித் தலைவர்களும் ( 5 நபர்களுக்கு மிகாமல்) சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முன் அனுமதி மற்றும் வாகனத்திற்கான அனுமதியை பெற்று, அரசு அறிவித்த வழிமுறைகளை பின்பற்றி உரிய சமூக இடைவெளியை கடைபிடித்து மாலை அணிவித்து மரியாதை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.சண்முகம்
அரசு தலைமைச் செயலாளர்.

பெறுநர்

அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நினைவகங்கள்) துறை,
தலைமைச் செயலகம், சென்னை 9
இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை, சென்னை 9
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
ஆணையர், சென்னை பெருநகர மாநகராட்சி, சென்னை.
காவல்துறை தலைவர், சென்னை
முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை.5
இயக்குநர், பேரிடர் மேலாண்மைத்துறை,
தமிழ்நாடு பேரிடர் இயக்குநர் மேலாண்மை அலுவலகம், சென்னை 5
தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர்,சென்னை 9
மாண்புமிகு முதலமைச்சர்அலுவலகம், சென்னை 9

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

31/7/2020

பிரிவு அலுவலர்.